மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விலையை உயர்த்த வேண்டாம், 'ஃப்ளையிங் ஸ்க்வாடு'களை எடுத்து விடுங்கள் என்கிருர். கள்ளத்தனமாக யார் நெல் கடத்தலில் ஈடுபட்டாலும் அதை அரசாங்கம் கண்டிப்பாய்த் தடுக்கும்.

பருப்பு விற்பனையில் நஷ்டம்

* 281 வின.—**திரு. எஸ். ஜே. ராமசாமி:** மாண்புமிகு உணவு-வணிகவரித்துறை அமைச்சர் 1967 ஜூன் மாதம் 29-ம் தேதி கேள்வி எண். 107-க்கு அளிக்கப்பட்ட விடையையொட்டி தயவு செய்து கீழ்க்கண்ட வினவிற்கு விடையளிப்பாரா—

பருப்பு விற்பனையில் 22 லட்சம் நஷ்டத்தை ஒட்டி அறிக்கை விடுவதாக சட்டமன்றத்திற்கு அறிக்கை எப்போது விடப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சட்டப்பேரவை முன் விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: அறிக்கையில் உள்ளபடி பார்த்தால் மிகக் குறைந்த விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறது. அதிகமான விலைக்கு விற்கப்பட்டிருப்பதும் தெரிகிறது. இதன் காரணமாகக் குறைந்த பட்சம் 15 லட்சமாவது ஆதாயம் கிடைத்திருக்க வேண்டுமே, 3.45 லட்சம்தான் நிகர லாபம் என்று இருக்கிறதே, இது சரியான புள்ளி விவரம்தான?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வாங்கி இரண்டாண்டு வைத்துவிட்ட காரணத்தினல் கொஞ்சம் கெட்டுப்போய்விட்டன. அவற்றை விலக்கி மற்றவற்றை இலாபத்தில் விற்றதனுல் மொத்த இலாபமும் குறைந்திருக்கிறது.

கனிப்பொருள் படிவங்கள்

* 282 வின.—**திருமதி கே. பி. ஜானகியம்மாள்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் வட்டத்தில் லந்தகோட்டை புஞ்சை நிலங்களில் விலையுயர்ந்த பச்சை, நீலம், போன்ற கற்கள் விளைகின்றன என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதை ஆய்ந்தறிய துரிதமான நடவடிக்கை எடுக்க உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். வரதராஜன்: மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டம் லந்தகோட்டை பகுதியில் உழும்போதே நிலக்காரர்களுக்குப் பச்சைக் கற்கள் கிடைக்கின்றன, அவற்றை எடுத்து

*372–374-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

1969 செப்டம்பர் 13]

வந்து சந்தையில் விற்கிறார்கள். இந்த வியாபாரம் நடக்கிறது, ஆகவே, இனியாகிலும் இதுபற்றி ஆராய்ச்சி செய்ய முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *இப்போதுள்ள தகவலின்படி ஆங்காங்கு சிற்சில கற்கள் கிடைக்கின்றன என்பதுதான். தொடர்ச்சியாக ஆராய்ந்து—மிக அதிக அளவில் கிடைக்கக்கூடும் என்று ஏற்பட்டால் அதற்கான நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது.*

* 283. *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether deposits of Barytes, mixed with Quartz occur over a wide area between Alangayam, and Andiappanur, Tirupathur taluk of North Arcot District?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *ஆம்.*

வட ஆர்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், ஆலங்காயத்திற்கும் ஆண்டியப்பனூருக்கும் இடையேயுள்ள கீழ்க்கண்ட பகுதிகளில் படிகக்கல்லும் (**Quartz** *) பாரியக் கந்தகையும்* **(Barytes)** *கிடைப்பதாகத் தெரிய வந்துள்ளது.*

1. *நரசிங்கபுரம், காலாரப்பட்டி ஓதுக்கக் காட்டுப் பகுதி (சுப்ரமணியம் கோயில் பகுதி).*
2. *ஆண்டியப்பனூர்—லாலாப்பேட்டை பகுதி.*

THIRU K. VINAYAKAM : If such deposits of Barytes mixed with quartz occur in these towns, what steps have Government taken to exploit these deposits?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *நம்முடைய மாநில ஜியாலஜிகல் நிர்வாகமும், மத்திய உதவியுடன் கூடிய ஜியாலஜிகல் நிர்வாகமும் தொடர்ந்து பரிசீலித்து வருகிறது. அங்கு போதுமான அளவு அதிகமாகக் கிடைக்கக்கூடும் என்று தெரிந்தால் அதை எப்படிப் பயன்படுத்தலாம் என்பது முடிவு செய்யப்படும்.*

திரு. மு. ச. சிவசாமி : *இந்த ஆண்டியப்பனூர் பக்கத்திலே கிடைப்பதாகச் சொல்லப்படுகின்ற பாரிடஸில் எத்தனை சதவீதம் குவார்டஸ் கிடைக்கிறது என்று சொல்ல முடியுமா ?*

மாண்புமிகு திரு. செ. மாதவன் : *எத்தனை சதவீதம் என்ற தகவல் இல்லை.*

" Bartytes occur along with quartz in the ratio of 2 :7 " *என்ற தகவல் இருக்கிறது. இரண்டும் எந்த எந்த விகிதத்திலே கலந்து கிடைக்கின்றன என்ற தகவல்தான் இருக்கிறது.*

** 284 வினா.—***திரு. கே. போஜன் :** *மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—*

நீலகிரி மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய பாக்சைட்டின் அளவு எவ்வளவு ?